[26th July 1962

(b) The main bridge work is expected to be completed by July 1963. The sanction for the construction of the two over-bridges is to be given by the Government of India. They are being repeatedly reminded to give early sanction.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இருந்து இன்னும் ரயில்வே மேம்பாலம் தொடங்கப்படவில்லை என்று தெரிகிறது. இவ்வளவு அதிகமாகப் பணம் செலவிட்டு ஒரு திட்டத்தை நிறைவேற்றும்போது, உடனடியாக ரயில்வே மேம்பால வேலையையும் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. வி. ராமைய்யா : கடந்த சில மாதங்களுக்கு முன்பாக அந்த மேம்பாலத்தைக் கட்டவேண்டும் என்று தீவிரமாக முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கும்போது இந்த மேம்பாலம் அதில் சேர்க்கப்படவில்லை. பிறகு இந்த மேம்பாலத்தையும் கட்டினால்தான் அந்தத் திட்டத்தின் முழுப் பலனும் கிடைக்கும் என்று உணரப்பட்டது. எனக்கு இருக்கும் தகவலிலிருந்து இதைக் கட்டினால்தான் போக்குவரத்து வசதி இன்னும் நல்லமுறையில் ஏற்படும் என்று தெரிகிறது. இந்தப் பாலம் கட்டியானவுடன் தஞ்சாவூர், திருச்சி போக்குவரத்தை இதன் வழியாக ஏற்படுத்தக்கூட முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே உடனடியாக இந்த மேம்பால வேலை நல்ல முறையில் அமையும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ரயில்வே மேம்பாலத்தைக் கட்டுவது பற்றி மத்திய அரசாங்கத்திற்கு எப்போது எழுதப் பட்டது ?

கனம் திரு. வி. ராமைய்யா: இந்தத் திட்டத்துடன் அது இணைக்கப்பட்டவுடனே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த வேலைபற்றி நமது பிரதம எஞ்சினியர் மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறார். இதில் வேறு ஏதாவது சிக்கல் இருந்தால் நானே நேரிடையாக பார்க்கவேண்டும் என்றும் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

***665 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை-தூத்துக்குடி-கன்னியா குமரி கடலோர ரோட்டை தேசிய பெருஞ்சாலையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை கேட்டுள்ளதா?

(இ) அதற்கு என்ன பதில் வந்திருக்கிறது ?

(உ) இன்னும் அந்த ரோடில் பூர்த்தியாகாத பகுதிகள், பாலங்கள் எவையேனும் உண்டா ?

(எ) அப்படியானால், எப்போது பூர்த்தியாகும் ?

26th July 1962]

THE HON. SRI V. RAMAIAH : (அ) Yes, Sir.

(இ) The final reply of Government of India is awaited.

(உ) & (எ) There are 25 unbridged crossings in the route. Of these, seven bridge works have been sanctioned by this Government and the remaining 18 works estimated to cost Rs. 150 lakhs will be taken after the approval of the Government of India for the development of Coastal Road is received. All the seven sanctioned bridge works are expected to be completed during the Third Plan period.

திரு. எம். எஸ். செல்வராஜன் : உத்தேச கன்னியாகுமரி-சென்னை ரோடானது கன்னியாகுமரி-காசி ரோடின் ஒரு பகுதி என்ற விவரத்தையும், கடலோரமாக இருக்கும் எல்லாத் துறை முகங்களையும், குறிப்பாகத் தூத்துக்குடி துறைமுகத்தையும் இணைக்கக்கூடிய பெரிய ரோடு என்ற விவரத்தையும் மீண்டும் மத்திய அரசாங்கத்திற்கு நமது அரசாங்கம் வலியுறுத்தி எடுத்துச் சொல்லி, துரிதமாக இந்த விவரங்கள் மத்திய அரசாங்கத்தின் கைக்குப் போக ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வி. ராமைய்யா : இந்த முக்கியமான ரஸ்தாவை எப்படியேனும் பூர்த்தி செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய பெரும் ஆசை. அதற்காக ஓரளவு இன்வெஸ்டி கேட் செய்யப்பட்டிருக்கிறது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இந்தத் திட்டம் இடம் பெறவேண்டும் என்ற முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது. போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினுல், அது தீவிர பரிசீலனையில் இல்லாமல் இதுவரைக்கும் இருந்திருக்கிறது. ஆனல், இந்த ரஸ்தாவினுடைய முக்கியத்துவத்தை உணரக்கூடிய காரணத்தினலே, இதற்கு மேலும் வேண்டிய முயற்சிகளை நமது அரசாங்கம் எடுக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Sainik school

* 666 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Sainik school at Kodaikanal ; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes, Sir. A statement[a] is laid on the table of the House.

திரு. வை. சங்கரன் : இந்த சைனிக் பள்ளிக்கூடத்திற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிற செலக்ஷன் கமிட்டியில் யார் யார் அங்கத்தினர்களாக இருந்தார்கள் ? எந்தத் தகுதிகளின் அடிப் படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ? இந்தப் பள்ளியிலிருந்து தேறிவந்த மாணவர்களுக்கு என்ன ப்ராஸ் பெக்ட்ஸ் இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மேஜை மீது வைக்கப் பட்டிருக்கிற விவரங்களைத் தவிர, வேறு விவரங்கள் என்னிடம் இல்லை.

a Printed as Appendix I on page 481 infra.